கூட்ட எண் 14
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 18.01.2019.

2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18.01.2019ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண் 38984/2014/பி1 நாள் 11.01.2019ல் தூய்மை இந்தியா திட்டம் (SBM)ன் கீழ் 8வது உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கை நாள் 19.12.2018 நிகழ்ச்சி நிரல் 4ல் அட்டவணை 2ல் Resource Recovery Centre கட்டமைப்பு பணிக்கு மதிப்பீடு ரூ.18.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்காணும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், வேலூர் -12 அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு திட்டப் பிரேரணை மேலனுப்பலாம். (கோப்பு எண் 999/2016/இ1)

2. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண் 38984/2014/பி1 நாள் 11.01.2019ல் தூய்மை இந்தியா திட்டம் (SBM)ன் கீழ் 8வது உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கை நாள் 19.12.2018 நிகழ்ச்சி நிரல் 4ல் அட்டவணை திடக்கழிவு மேலாண்மை பணிகள் முதல்நிலை சேகரிப்பு பணிக்கு தேவையான Battery Operated Vehicles 19எண்ணிக்கை வாங்க மதிப்பீடு ரூ.34.20 லட்சத்திற்கும், Light Commercial Vehicles 3எண்ணிக்கை வாங்க மதிப்பீடு ரூ.16.80லட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.51.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், வேலூர் -12 அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு திட்டப் பிரேரணை மேலனுப்பலாம். (கோப்பு எண் 999/2016/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.

கூட்ட எண் 15
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.01.2019.

2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31.01.2019ந் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள கட்டுமான பணிகள் நகராட்சிக்கு சொந்தமான மாடு அடிக்கும் இடத்தில் இரண்டு எண்ணிக்கையில் நடைபெற்று முடியும் நிலையில் உள்ளது. எனவே, மேற்படி இடத்திற்கு புதியதாக மும்முனை மின் இணைப்பு வழங்க கோரி கடிதம் அனுப்பட்டதில், அதன்படி, உதவி மின் பொறியாளர் இ & ப / நகர் / மேற்கு / ஆரணி அலுவலகத்திலிருந்து வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் ரூ.24718/- செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்..(கோப்பு எண் 525/2018/இ1)

4. திரு. K.R. நாகரத்தினம் த/பெ ராம கவுண்டர் கதவு எண் 16, வீரபத்திரன் தெரு,சைதாப்பேட்டை, ஆரணி என்பவர் ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A. பிளாக் 3 நகரளவு எண் 102ல் தெருவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் திரு. G.சுரேஷ்குமார் என்பவர் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டடத்தினை இடிக்க வேண்டும் என தெரிவித்து ஆணையாளரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண் 13547/2018ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி (DISMISS) செய்யப்பட்டு அதன் நகல் இவ்வலுவலகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது. மேற்படி வழக்கில் ஆஜராகியதற்காக நகராட்சி வழக்கறிஞர் திரு. பால்ராஜ் அவர்கள் தம்முடைய வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்குமாறு கோரியுள்ளார். எனவே, வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி முன்அனுமதி வழங்கவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கலாம். மேலும், மன்றம் முன்அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 2573/2018/எப்1)

5. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ6/3725/2017 நாள் 22.01.2019ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018ம் ஆண்டிற்கு கீழ்காணும் பணி செய்ய மதிப்பீடு ரூ.8.77.000/-லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி வேம்புலி அம்மன் கோயில் எதிரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 877000/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம், மேலும், இப்பணி திட்டப் பணி என்பதால், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1547/இ1/2017)

6. ஆரணி நகராட்சி வார்டு எண் 32 பகுதியில் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலைய வளாகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கென அமைக்கப்பட்டுள்ள (பொது கழிவறை) நம்ம டாய்லெட் பைப்லைன், திருகு குழாய்கள், நீர்த் தேக்கத் தொட்டி பாதுகாப்பு தகடுகள், ஆகியவைகள் சரி செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

7. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 1191/பி3/2019 நாள் 21.01.2019ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டம் (2018- 2019)ன் கீழ் பின்வரும் பணிகளுக்கு நிர்வாக அனுமதியும், அதற்கான நிதி பங்களிப்பும் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

The Funding Pattern for the administrative sancton accorded estimate amount should be followed as metioned below :

| GOI Share | State Share | ULB Share | Total Estimate Amount |
|---|---|---|---|
| 35% | 55% | 10% | 100% |

Annexure

Name of ULB : Arani Municipality

| Sl. No. | Nature of Work | Name of Work | Estimate Amount (Rs.in Lakh) |
|---|---|---|---|
| 1 | Resource Recovery Centre | Construction of Resource Recovery Centre at Arani Municipality - 1No | 18.00 |
| 2 | Procurement of Primary Collection Vehicles | Purchase of Battery Operated Vehicle as per Specification (19 No's) | 34.20 |
| 3 | | Purchase of Light Commercial Vehicle 2cu.m capacity as per specification (3No's) | 16.80 |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு நிதி பங்களிப்பின்படி, மேற்படி பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்படி நிதி பங்களிப்பின்படி, பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

8. ஆரணி நகராட்சி வார்டு எண் 01 புதுகாமூர் தெரு அருகில் உள்ள ஜெயம் நகர் பகுதியில் சாலை வசதி இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி பொது மக்கள் போக்குவரத்திற்கு இடையூராகவும், தண்ணீர் தேங்குவதால் அப்பகுதியில் கொசுக்கள் உற்பத்தியாகும் சூழல் உள்ளதால், பொது மக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் சிமெண்ட் சாலை அமைக்க ஆகும் செலவினம் ரூ. 100000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

9. ஆரணி நகராட்சி வார்டு எண் 31 கோட்டை மேற்கு தெருவில் உள்ள கைலாயநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. அக்கோயில் அருகில் இராமலிங்க அடிகளார் உருவ வழிபடும் இடம், கோயில் குளம் உள்ளது. பொது மக்கள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் பொது மக்கள் ஆலய தரிசனத்திற்கு வந்து வழிபட்டு செல்கின்றனர். ஆலயம் மற்றும் குளங்கரை சுற்றியுள்ள இடங்களில் முட்பதர்கள், செடி, கொடிகள் வளர்ந்து சிறியகாடு போல காட்சியளிக்கிறது. மேலும், அவ்விடத்தில் விஷஜந்துக்கள் சுற்றிதிரியும் அபாயம் உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்டுள்ள இடத்தினை பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றி சமன் செய்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

10. ஆரணி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நகரில் சேகரமாகும் குப்பைகளை நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மைய கட்டடங்கள் 07.12.2018 அன்று திறக்க வருகை தந்த மாண்புமிகு சேவூர் எஸ்.இராமச்சந்திரன் தமிழக இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை பின்வரும் தினசரி நாளிதழ்களில் ஆரணி நகராட்சி சார்பாக வரவேற்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான விளம்ரப கட்டணம் ரூ.106680/- வழங்கவும், அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினமணி நாளிதழ் | 07.12.2018 | ரூ.22260.00 |
| 2. | தினத்தந்தி நாளிதழ் | 07.12.2018 | ரூ.20160.00 |
| 3. | தினகரன் நாளிதழ் | 07.12.2018 | ரூ.23100.00 |
| 4. | தினமலர் நாளிதழ் | 07.12.2018 | ரூ.20160.00 |
| 5. | தின செய்தி நாளிதழ் | 08.12.2018 | ரூ.10500.00 |
| 6. | தமிழ் முரசு நாளிதழ் | 08.12.2018 | ரூ.10500.00 |
| | | ஆக மொத்தம் | ரூ.106680.00 |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

11. ஆரணி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலிம் உள்ள பொது மக்களுக்கு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மான்யக் கோரிக்கை எண் 34 அறிவிப்பு எண் 14ல் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு தானியங்கி குடிநீர் அமைப்புகளை (Automatic Vending Centers) ஏற்படுத்த விருப்பம் கோரும் அழைப்பு (Expression of Interest) 12/10/2018 அன்று கோரப்பட்டதில் M/s Dharna Infrastructure Private Limited. AP887, J Block st Street. 13th Main road. Anna Nagar, Chennai - 40 அவர்கள் அளித்திருந்த RFPஐ ஏற்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. RFP படிவத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி, நகராட்சியின் செயல்பாடுகள் என்ற அடிப்படையில் தானியங்கி குடிநீர் மையத்திற்கு தேவையான குடிநீர் வசதி மற்றும் மின்வசதி ஏற்படுத்தி தர வேண்டியது நகராட்சியின் கடமையாகும். தற்போது 33 வார்டுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் 25 இடங்களில் ஆழ்துளைக் குழாய் கிணற்றுடன் கூடிய மின் விசை பம்பு உள்ளது. மீதமுள்ள 8 இடங்களில் தண்ணீர் வசதி இல்லை. எனவே, பின்வரும் 8 இடங்களில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின் விசை பம்பு பொருத்தும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு 1. வார்டு எண் 01ல் உள்ள சமுதாய கூடம் அமைவிடம், 2.வார்டு எண் 07ல் உள்ள ஆண்டாள் சன்னதி தெரு, 3. வார்டு எண் 16ல் உள்ள பழனி ஆண்டவர் கோயில் தெரு, 4. வார்டு எண் 17ல் உள்ள மருதூரான் தெரு நகராட்சிப் பள்ளி பகுதியில், 5. வார்டு எண் 18ல் உள்ள அம்பேத்கார் நகர் பகுதியில், 6. வார்டு எண் 19ல் உள்ள சுந்தரம் தெரு ஆரம்ப பகுதி தர்மராஜா கோயில் தெரு, 7. வார்டு எண் 22ல் உள்ள தாய் சேய் நல மைய பகுதியில், 8. வார்டு எண் 27ல் உள்ள தர்மராஜா கோயில் பின்புறம் முள்ளிப்பட்டு சாலை பகுதியில் ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து சிறு மின் விசை பம்பு பொருத்தும் பணிகள் மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும், மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், இச் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

12. ஆரணி நகராட்சி பகுதிகளில் தினசரி சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை வார்டு எண் 10ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மாடு அடிக்கும் இடத்தில் இதுநாள் வரை சேகரிக்கப்பட்டு வந்தது. மேற்படி இடத்தில் தேங்கிபுள்ள குப்பைகளை பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் நகருக்கு அப்பால் கொண்டு சேர்த்திடவும், எருகிடங்கில் குப்பைகளை எடுத்தபின் சமன் செய்திடவும், ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

13. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி - 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **23.01.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br><br>வருவாய் நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு தேவையான 25 எண்ணிக்கை தள்ளுவண்டிகளின் முன் பக்க சக்கரங்கள் 25எண்ணிக்கை மற்றும் பின்பக்க சக்கரங்கள் 50எண்ணிக்கை விநியோகம் செய்தல் | 96.950 | M/s R.K. Enterprises Perambur, Chennai - 11<br><br>M/s Priya Enterprises Perambur, Channai - 11 | 0.04 % குறைவு<br><br>0.70 % அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு தேவையான மக்கும் குப்பை மக்காத குப்பை சேகரம் செய்யும் சிகப்பு மற்றும் பச்சை வண்ணத்தில் பின்கள் தலா 50 எண்ணிக்கை விநியோகம் செய்தல் | 1,25 | M/s R.K. Enterprises Perambur, Chennai - 11<br><br>M/s Priya Enterprises Perambur, Channai - 11 | 0.03 % குறைவு<br><br>0.50 % அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்உபகரணங்கள் விநியோகம் செய்தல் | 4.00 | M/s Venkatenterprises. Mannarkudi District.<br><br>M/s Srija Electricals. Maduranthagam | 1.88 % குறைவு<br><br>3.52 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

14. இயக்குநர், தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் பரிமாற்ற மையம் கிண்டி சென்னை - 600 025 அவர்களின் கடிதம் எண் CES / DIR / Arani Municipality நாள் 25.01.2019 கடிதத்தில், ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வேலப்பாடி எருகிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை (கசடு கழிவுகள்) BIO MINING முறையில் அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள இவ்விடத்தில் உள்ள மரபு வழி கழிவுகளின் (கசடு கழிவுகள்) அளவீடுகள் செய்து அதற்கான வரைபடத்துடன் விரிவாக திட்ட அறிக்கை (DPR) தயார் செய்ய ரூ.1,50,000/- மற்றும் GST (18%) ரூ. 27,000/- ஆக மொத்தம் ரூ. 1,77,000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள தொகையினை இயக்குநர், தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் பரிமாற்ற மையம் கிண்டி சென்னை - 600 025 அவர்களுக்கு செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 999 / 2016 / இ1)

15. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு பகுதியில் உள்ள கடைகள் மிகவும் பழுதடைந்து சிதலமைந்து இடிந்து விழும் நிலையில் இருந்த கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்தப்பட்ட காலி இடத்தில் தரை தளத்தில் 10 கடைகள் அடங்கிய வணிக வளாகம் கட்டடம் கட்டும் பணியை நகராட்சியில் முன்ஏலம் மூலம் பெறப்பட்ட முன்ஏலத் தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சியில் முன் ஏலம் மூலம் பெறப்பட்ட முன் ஏலத்தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1

16. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு பகுதியில் தரை தளத்தில் அமையவுள்ள புதிய வணிக வளாக கட்டடத்தின் முதல் தளத்தில் வணிக பயன்பாட்டிற்காக கட்டடம் கட்டும் பணியை நகராட்சியில் முன் ஏலம் மூலம் பெறப்பட்ட முன் ஏலத்தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சியில் முன் ஏலம் மூலம் பெறப்பட்ட முன் ஏலத்தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.